**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C 524 of 2012**

**Deposition of Witness P. W.6**

| | |
|---|---|
| **Name : பார்வதி** | **Father/Husband's Name: பன்னீர் செல்வம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 18.12.2024**

**முதல் விசாரணை**

நான் மதுரை மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஒய்வு பெற்றுவிட்டேன். கடந்த 24.04.2012ம் வருடம் நான் சார்பு ஆய்வாளராக தாலுகா காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது அன்று மதியம் 3.30 மணிக்கு நான் ரோந்து பணியில் இருந்த போது பழனி அரசு மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட தகவலின் பேரில் சிகிச்சையில் இருந்த முத்துச்சாமி என்பவர் அளித்த புகார் வாக்குமூலத்தின் பேரில் பதிவு செய்த பழனி தாலுகா காவல் கு.எண். 126/2012 பிரிவு 294(பி), 324 , 506(ii) இ.த.ச பிரிவின் கீழ் வழக்கினை பதிவு செய்தார். என்னிடம் காட்டப்படும் அச்சு முதல் தகவல் அறிக்கை நான் தயார் செய்தது தான். **அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. முத்துச்சாமி என்பவர் கொடுத்த புகாரில் எனது சித்தப்பா மாரிமுத்துவுக்கும், வெள்ளைச்சாமிக்கும் தொகுப்பு வீடு கொடுத்ததில் இட பிரச்சனை இருந்து வந்தது. பின்னர் மேற்படி இடபிரச்சனை குறித்து ஊர் பெரியவர்களை வைத்து பைசல் செய்யப்பட்டது எனவும், மேற்படி பிரச்சனையை மனதில் வைத்து கொண்டு 23.04.2012ம் தேதி இரவு 11 மணிக்கு புகார்தாரரின் வீட்டின் முன்பு பத்ரகாளி, இளையராஜா, மாரியப்பன், அருண்குமார் ஆகியோர் வந்து நின்று கொண்டு அசிங்கமாக கெட்ட வார்த்தையால் திட்டியும் , உருட்டு கட்டை மற்றும் பாட்டில் ஆகியவைகளை எடுத்து அடித்ததில் புகார்தாரரின் அப்பா வீரனுக்கு தலையின் பின்பக்கம் வலது தோள்பட்டை, வலது

முதுகு, இடது கால் முட்டி, வலது கை பெருவிரல் ஆகிய இடங்களில் ரத்த காயங்கள் ஏற்படுத்தியதாகவும் தடுக்க வந்த புகார்தாரரின் தம்பி செல்வத்தையும் உருட்டு கட்டை பாட்டிலால் அடித்தும் புகார்தாரரின் முன் பக்க தலை, இடது முழங்கை, இடது தோள்பட்டையில் காயத்தை ஏற்படுத்தியும், புகார்தாரரின் தம்பிக்கு தலையின் முன்பக்கம் இடது முழங்கையில் அடித்து காயத்தை ஏற்படுத்தியும், பின்னர் அக்கம் பக்கம் இருந்தவர்கள் சத்தத்தை கேட்டு ஓடி வந்ததாகவும், சின்னான், சின்னப்பன் என்பவர்கள் சண்டையை விலக்கிவிட்டதாகவும், மேலும் கையில் இருந்த உருட்டுக்கட்டை , பாட்டிலை காட்டி புகார்தாரரை பார்த்து என்னைக்கா இருந்தாலும் உன் சாவு என் கையில் தான்டா என்று கொலை மிரட்டல் விடுத்தும், பசாரித்து மிரட்டி விட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும், பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் பழனி அரசு மருத்துவமனைக்கு புகார்தாரரும், அவரது அப்பா, தம்பி ஆகியோர் சிகிச்சைக்கு சேர்ந்து பின்னர் வாக்குமூலம் அளித்ததாகவும் அவர்களது புகாரில் தெரிவித்தார். பின்னர் நான் விசாரணைக்கு எடுத்து கொண்டு 24.04.2012 ம் தேதி காலை 6 மணிக்கு சாட்சிகள் ஆண்டியப்பன், மகாலிங்கம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கில் காயம் பட்ட நபருக்கு சிகிச்சை அளித்து காயச்சான்று வழங்கிய மருத்துவர் முகைதீன் நவுசாத் என்பவரை விசாரத்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை திண்டுக்கல் அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணையில் சென்றுள்ளார்கள். இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 294(பி), 324 , 506(ii) இ.த.ச படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. வழக்கின் புகார் வாய்மொழியாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கில் காயம்பட்டதாக சொல்லும் முத்துச்சாமி, செல்வம் , வீரன் ஆகியோர் ஒரே குடும்பத்தை சார்ந்தவர் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. வழக்கு

சம்பவத்திற்கு முன்பு வழக்கில் காயம் பட்ட நபர்களுக்கும் , புகாரில் சொல்லபட்ட வெள்ளைச்சாமி என்பவருக்கும் தொகுப்பு வீடு கொடுப்பது சம்பந்தமாக பிரச்சனை இருந்ததாக சொல்லபட்டது என்றால் சரிதான். புகாரில் சொல்லபட்ட வெள்ளைசாமிக்கும், வழக்கில் கண்ட நான்கு எதிரிகளுக்கும் என்ன உறவு முறை என்று நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்கு சம்பவம் இரவு 11 மணிக்கு நடந்ததாக சொல்லபட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கில் காயம்பட்டதாக சொல்லபடும் 3 நபர்களும் இரவு 11 மணிக்கு வீட்டிற்குள் இருந்தார்களா வெளியில் இருந்தார்களா என்ற விபரம் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. வழக்கின் புகார்தாரர் வீடும், நான்கு எதிரிகளின் வீட்டிற்கு இடையே எவ்வளவு துாரம் என்பதை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் சுமார் 1 கி.மீ தொலைவு இருந்ததாக நான் விசாரணையில் தெரிந்துகொண்டேன். மேற்படி நபர்கள் சம்பவ இடத்திற்கு எவ்வாறு வந்தார்கள் என்று நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. வழக்கின் புகாரில் எதிரிகள் எந்த நபரை பார்த்து குறிப்பிட்டு அசிங்கமாக பேசினார்கள் என்பது குறித்தோ, எந்த எதிரி தாக்கியதால் யாருக்கு எந்த காயம் ஏற்பட்டது குறித்து புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கின் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றபடவில்லை. வழக்கு சம்பவத்திற்கு பின்பு புகார்தாரரின் தந்தைக்கும், வெள்ளைச்சாமிக்கும் தொகுப்பு வீடு சம்பந்தமாக பிரச்சனை இருந்ததாகவும், அதனை ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பைசல் பேசியதாக சொல்லபட்டுள்ள நிலையில் எந்த தேதியில் எங்கு வைத்து பைசல் பேசினார்கள் என்ற விபரம் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. வழக்கில் காயம்பட்ட நபர்களுக்கு் சிகிச்சை அளித்ததாக சொல்லபடும் மருத்துவரின் பெயர் சாட்சி பட்டியலில் வேற பேனா மையால் எழுதப்பட்டது என்றால் சரிதான். வழக்கின் வரைபடத்தில் சொல்லபட்டுள்ள சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள நபர்களான சுப்பிரமணி, வடிவேல், பழனிச்சாமி ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கபடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதியறிக்கையில் எந்தெந்த எதிரிகளின் செயல்களால் எந்தெந்த நபர்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டார்கள் என்பது குறித்து தனித்தனியாக சட்டபிரிவு எதுவும் குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 யிடம் நான் புகார் வாக்குமூலம் பெற்ற போது அவர் மது போதையில் இருந்தாரா என்பது குறித்து விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அ.சா.1 மது போதையில் இல்லை. அவர் பேசக்கூடிய நல்ல நிலையில் தான் இருந்தார் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் குறிப்பாக எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் நபர்களின் எண்ணிக்கை குறிப்பிட்டு சொல்லவில்லை ஆனால் நபர்கள் இருந்தார்கள். வழக்கில் சொல்லப்பட்ட எதிரிகளும், புகார்தாரரும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கில் சொல்வது போல வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும், தொகுப்பு வீடு பெறுவது சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு கூட்டத்தில் இருந்தவர்களால் அ.சா.1 மற்றும் அ.சா.2, அ.சா.3 நபர்களுக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

4. வழக்கு சம்பவத்தில் எதிரிகள் நால்வருக்கும் காயம் இருந்ததா என்றால் இல்லை. நான் சொல்வது போல எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் காயம் பட்டதாக சொல்ல படும் 3 நபர்களாலும் எதிரிகளுக்கும் காயம் ஏற்பட்டிருக்கும் என்றும் அவ்வாறு எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லாததால் தான் எதிரிகளுக்கு காயமில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவ இடம் செல்லாமலும், சம்பவ இடத்தில் சாட்சிகளை விசாரணை செய்யாமலும் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்கள் சாட்சிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

K R KALAIVANAN

Digitally signed by K R KALAIVANAN
Date: 2024.12.18 11:40:04 +0530

நீதித்துறை நடுவர்,

பழனி